2020 மார்ச் 23]

கோரிக்கைக்கேற்ப பரமக்குடி மருத்துவமனைக்கும், பார்த்திபனூர் மருத்துவமனைக்கும் என்னென்ன வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, அந்த வசதிகளை அரசு ஆய்வுசெய்து, செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

164—

பேருந்து வசதி

***36317—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் முதல் எர்ணாகுளம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர்–எர்ணாகுளம் தடம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் தமிழ்நாடு–கேரளா ஆகிய இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்க இயலும். மேலும், தற்சமயம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பாக 730 UD தடத்தில் செங்கோட்டையிலிருந்து, எர்ணாகுளத்திற்கு ஓர் அதிநவீன சொகுசுப் பேருந்து திண்டுக்கல் வழியாக தினசரி இயக்கப்படுகிறது. வேடசந்தூர்–எர்ணாகுளம் செல்லும் பயணிகள் புறநகர், நகரப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திண்டுக்கல் சென்று மேற்கூறிய பேருந்து வசதியைப் பயன்படுத்தி எர்ணாகுளம் சென்றடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கும் கரம் விலகும் முன்னே வரம் தந்த வள்ளலாக, வேடசந்தூர் தொகுதியில் இருக்கின்ற நீர்நிலைகளை, காவேரியின் உபரி நீரைக்கொண்டு நிரப்ப வேண்டுமென்ற கோரிக்கையை வைத்த மூன்றே நாட்களுக்குள்ளாக அதற்கான முதற்கட்ட ஆய்விற்கு நிதி ஒதுக்கிய, உழவுக்கு உயிரூட்டும் உன்னத மாண்புமிகு முதல்வர் அவர்களை நன்றியோடு இந்த நேரத்தில் வணங்கி, அவருக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய வேடசந்தூர் தொகுதியில், வேடசந்தூர் மற்றும் வட மதுரை ஒன்றியங்களுக்குட்பட்ட 5,000–க்கும் அதிகமான குடும்பத்தினர் எர்ணாகுளம் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற வாத்துருத்தி பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்காக அங்கு தங்கியிருந்து ஒவ்வொரு நாளும் 100–லிருந்து 200 பேர்களும், வார இறுதி நாட்களில் கிட்டத்தட்ட 1,000 நபர்களும் எர்ணாகுளத்திலிருந்து வேடசந்தூருக்கு தனியார் வாகனங்கள் மூலமாக வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. தங்கள் உடலை வருத்தி காலையிலிருந்து மாலை வரை கடுமையாக உழைத்து ஒரு நாளைக்கு 800 ரூபாய், 900 ரூபாய் என அவர்கள் சம்பாதிக்கிறார்கள். தனியார் வாகனங்களைப் பயன்படுத்துகின்றபோது, அவர்கள் கிட்டத்தட்ட 600 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை பேருந்து கட்டணத்திற்காகவே செலவிடும் சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதகமான ஒரு பதிலைத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், அடுத்து வரவிருக்கிற சட்டமன்றக் கூட்டத்தில் எங்களுக்கென்று ஒரு தனி வழித்தடத்திற்கு அனுமதியை அவர் பெற்றுத் தருவார் என்ற அந்த நல்ல செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

இப்போது, செங்கோட்டையிலிருந்து எர்ணாகுளம் வரை இயங்கிக் கொண்டிருக்கின்ற பேருந்தினை, 26 கிலோ மீட்டர் நீட்டிப்பு செய்தால்,

திண்டுக்கல் வந்து, மீண்டும் திண்டுக்கல்லிலிருந்து வேடசந்தூர் வந்து, வேடசந்தூர் வழியாக ஒட்டன்சத்திரம் சென்றுவிடலாம். இது அனைத்துமே நான்குவழிச் சாலையாகவும், intermediate line ஆகவும் இருக்கின்ற காரணத்தினால், வாகனம் ஓட்டுபவர்களுக்கு எந்தச் சிரமமும் இல்லை. ½ மணி நேரம் கூடுதலாகும். எனவே, அந்தப் பேருந்தினை பரீட்சார்த்த முறையில் வேடசந்தூர் வரை நீட்டிப்பு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Summer vacation நேரங்களில் சிறப்புப் பேருந்துகளை பிற மாநிலங்களுக்கு இயக்குவதற்கு சிறப்பு அனுமதி தேவையில்லை. ஏற்கெனவே அனுமதி வாங்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் கோடைக்காலத்தில் SETC பேருந்து ஒன்றை வேடசந்தூரிலிருந்து எர்ணாகுளத்திற்கு பொது மக்களுடைய நலன்கருதி, சனிக்கிழமை இரவு எர்ணாகுளத்திலிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை வேடசந்தூருக்கு வருமாறும், ஞாயிற்றுக்கிழமை இரவு வேடசந்தூரிலிருந்து புறப்பட்டு திங்கட்கிழமை காலை எர்ணாகுளத்திற்கு சென்றடையும் வகையிலும், பரீட்சார்த்த முறையில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தற்போது, அண்டை மாநிலங்களுக்கு இயக்கப்படுகின்ற பேருந்துகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழித்தடம் நீட்டிப்பு குறித்து இங்கே குறிப்பிட்டார். அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேடசந்தூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்து வசதியினை புதியதாக ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேடசந்தூர் தொகுதி, திண்டுக்கல் மற்றும் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மதுரையிலிருந்து நூற்றுக்கணக்கான பேருந்துகள் சென்னைக்கு தினமும் இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்துகளில் போதுமான இடவசதி இருக்கிறது. பயணிகளுடைய அடர்வும் குறைவாக இருக்கிறது. எனவே, அந்தப் பேருந்து வசதிகளே போதுமானது என்று நான் கருதுகிறேன். இருந்தபோதிலும், வேடசந்தூரிலிருந்து எவ்வளவு பயணிகள் சென்னைக்கு வருகை தருகிறார்கள் என்பது குறித்து துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடவள்ளி, வீரகேரளம் பகுதிகளுக்கும், கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட துடியலூர் மற்றும் கவுண்டம்பாளையம் பகுதிகளுக்கும் 610 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தியமைக்கும், அதைப்போல, கோவை மாநகராட்சியில், விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கு JNNURM திட்டத்தின்கீழ், 175 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கவும், சக்தி சாலை விரிவாக்கத்திற்கு நிலம் எடுப்பதற்கு 38.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

2020 மார்ச் 23]

அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

அதைப்போல, கோவை வடக்கு தொகுதிக்குட்பட்ட காந்தி மாநகர் பகுதிக்கு இயக்கப்பட்டுக் கொண்டிருந்த S21, 140 மற்றும் 70C எண்கள் கொண்ட பேருந்துகள், பீளமேடு இரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெற்று வந்ததால் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது, அந்த உயர்மட்டப் பாலம் மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டமான, சென்னையில் சிற்றுந்துகள் (Small Bus) இயக்கும் திட்டத்தை, கோவை மாநகராட்சிக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேம்பாலப் பணிகள் நடைபெற்றதால் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்ததாக இங்கே குறிப்பிட்டார். மேம்பாலப் பணிகள் முடிவுற்று, போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மீண்டும் பேருந்துகளை இயக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிற்றுந்து (Small Bus) இயக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையில் குறுகலான பகுதிகளில் மக்களுக்கு போக்குவரத்து வசதியை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக சிற்றுந்து சேவைத் திட்டத்தை சென்னை

மாநகரத்தில் தொடங்கி வைத்தார். அந்தத் திட்டம் சென்னை மாநகரத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்தை கோவை மாவட்டத்திற்கு விரிவுபடுத்த வேண்டுமென்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கெள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக, கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எல்லோருடைய சார்பாக எனது வணக்கத்தினையும் நன்றிகலந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மயிலாப்பூரில் நீண்டநாட்களாக சிற்றுந்து இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். அதனை இயக்க ஆணை பிறப்பித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டி, அதனைத் தொடர்ந்து இயக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இரண்டு பேருந்துகள் 23A, 23B ஆகியவை மயிலாப்பூரிலிருந்து ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி வழியாகவும், எத்திராஜ் கல்லூரி வழியாகவும், எக்மோர் சென்றடைகின்றன. அந்த இரண்டு பேருந்துகளும் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவற்றை மீண்டும் இயக்க வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்து, 21D என்ற பேருந்து மிக அதிவிரைவாகச் செல்கின்றது. மக்கள் அனைவரும், '21D வருகின்றது, ஓரம்போ, ஓரம்போ' என்று பயந்து ஓடும் வகையில் உள்ளது. எனவே, அந்தப் பேருந்துக்கு கொடுக்கப்பட்ட நேர அளவினை அதிகரித்துக் கொடுத்தால்

2020 மார்ச் 23]

நிச்சயமாக அது மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற கோரிக்கையினை தங்கள் மூலமாக வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 21D பேருந்து வேகமாகச் செல்வதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உடனடியாக அதன் நேர அளவுகளை இன்றே கணக்கிட்டு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த வழித்தடங்களில் சிற்றுந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

மாணவர்கள் விடுதி

***8603—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், கழுதூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம்